

# பிபிஆர் வீடுகளில் குடியிருக்கும் சிலருக்கு வேறு இடத்திலும் வீடுகள்

## அமைச்சர் வெளியிட்ட தகவல்




கோலாலம்பூர், ஆக. 21-

பிபிஆர் எனப்படும் மக்கள் வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளில் வாடகைக்கு குடியிருக்கும் சில தரப்பபினர் கோலாலம்பூரிலிருந்து 35 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு ஒரு வீடு வைத்திருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது. மேலும் சில இந்த பிபிஆர் வீடுகளில் குடியிருப்பதும் இல்லை. ஒருவேளை இவர்கள் மற்றவர்களுக்கு இந்த வீடுகளை வாடகைக்கு விட்டிருக்கலாம். அல்லது அந்த வீடுகளை காலியாகவே விட்டு வைத்திருக்கலாம் என்றும் பிரதமர் துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்றுக்கூறினார்.

பக்கம் 13

### முதல் பக்கத் தொடர்ச்சி

**பிபிஆர் வீடுகளில் குடியிருக்கும் ...**

அதுமட்டுமன்றி பிபிஆர் வாடகை வீடுகளில் குடியிருப்போர் வருமான நிபந்தனைகளையும் மீறியிருப்பது தெரிய வருகிறது. அதுமட்டுமன்றி பிரஜைகள்அல்லாத தம்பதியர் இந்த பிபிஆர் வீடுகளில் வசிப்பதும் தெரிய வருகிறது. சிலர் வாடகை பாக்கி மிக அதிகமாக வைதிருப்பதும் தெரிய வருவதாக அவர் சொன்னார்.

ஆகவே பிபிஆர் வீடுகள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்ய கோலாலம்பூர் மாநகர் மன்றம் தற்போது பிபிஆர் குடியிருப்பு மறு பதிவை செய்து வருகிறது என்றும் அவர் சொன்னார். பரிசோதனை செய்யப்பட்ட 3,379 பிபிஆர் வீடுகளில் வாடகைக்கு குடியிருப்போரில் 3031 பேர் அவற்றில் குடியிருக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

ஆனால் எஞ்சிய 348 பேர் நிபந்தனைகளை மீறியதால் அவர்கள் அங்கு குடியிருக்கும் தகுதியை இழந்திருக்கின்றனர். பிபிஆர் வாடகை வீடுகள் நியமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவது உறுதி செய்யப்பபடும். காலியாக உள்ள வீடுகள் மறுபதிவுகள் மூலம் தகுதி பெற்ற மனுதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

பிபிஆர் வீடுகள் உண்மையிலேயே தேவைப்படும் தரப்பினருக்கும் மட்டும் கிடைப்பதை உறுதி செய்வதில் மடானி அரசு சவாலை சந்திக்கிறது என்றும் அவர் கூறினார். பிபிஆர் வாடகை வீடுகளுக்கான மாத வாடகை 124 ரிங்கிட் மட்டும்தான். தலைநகர் கோலாலம்பூரில் கொஞ்சம் சௌகரியமாக வாழக்கூடிய வகையில் பி40 தரப்பு குடும்பங்களுக்கு உதவ அரசாங்கம் வழங்கியுள்ள மிகப் பெரிய உதவித்தொகை திட்டங்களில் ஒன்றாக இந்த பிபிஆர் குடியிருப்புத் திட்டங்கள் உள்ளன.

பிபிஆர் வீடுகளில் வாடகைக்கு குடியிருக்கும் மலேசிய பிரஜைகளான கணவன், மனைவிக்கான கூட்டு வருமானம் 3,000 ரிங்கிட்டிற்கும் குறைவாக இருக்க வேண்டும். அதேசமயம் நடுத்தர விலை வீடுகளுக்கு 4,000 ரிங்கிட்டிற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை டிபிகேஎல் விதித்திருக்கிறது.